# 10. தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம்

## 10.1 முன்னுரை

தமிழ்நாடு பாடநூல் நிறுவனம் மார்ச் 4, 1970 அன்று ஒரு நிறுவனமாக தோற்றுவிக்கப்பட்டு, 1860 ஆம் ஆண்டு சங்கப் பதிவுச் சட்டத்தின்படி பதிவு செய்யப்பட்டது. பின்பு 1993 ஆம் ஆண்டு தமிழ்நாடு பாடநூல் கழகம் எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டது. இக்கழகம் சென்னையைத் தலைமையிடமாகக் கொண்டு 22 வட்டார அலுவலகங்களுடன் செயல்பட்டு வருகிறது.

விலையில்லா பாடநூல்களை தரமான முறையில் அச்சிட்டு உரிய காலத்தில் மாணவர்களுக்கு வழங்குவதும், விலையில்லா பாடநூல்களை அரசு மற்றும் அரசு நிதி உதவி பெறும் பள்ளி மாணவர்களுக்கு வழங்குவதும், சுயநிதிப் பள்ளிகளுக்கு நியாயமான விலையில் பாடநூல்களை வழங்குவதும் தமிழ்நாட்டு பாடநூல் கழகத்தின் முதன்மை நோக்கமாகும். மாணவர்கள் சேர்க்கையை அதிகரிக்கவும், அவர்கள் தொடர்ந்து கல்வி பயிலும் வகையில் தக்கவைத்துக்கொள்ளவும், தரமான கல்வியை வழங்கவும்

தற்போது கீழ்க்கண்ட விலையில்லா பொருட்கள் மற்றும் பிறவும் பள்ளி மாணவர்களுக்கு அரசால் வழங்கப்பட்டு வருகிறது.

1. குறிப்பேடுகள்
2. சீருடைகள்
3. புத்தகப்பைகள்
4. வண்ணம் தீட்டும் குச்சிகள்
5. வண்ணப்பென்சில்கள்
6. கணித உபகரணப்பெட்டிகள்
7. காலணிகள்
8. கம்பளி ஆடைகள்

மேற்காணும் விலையில்லா பொருட்கள் அனைத்தும் பள்ளிக் கல்வித் துறையின் பல்வேறு கல்வி இயக்குநரகங்களால் கொள்முதல் செய்யப்பட்டு மாணர்களுக்கு விநியோகம் செய்யப்பட்டு வந்தன.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மாணவர்களுக்கு தரமானமுறையில் இவ்விலையில்லா பொருட்களை குறித்த காலத்தில் வழங்கிட, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி எண். 110–ன்கீழ் விலையில்லா பொருட்களை கொள்முதல் செய்து விநியோகிக்கும் பணியினை தமிழ்நாட்டுப் பாடநூல் கழகத்தின் மூலம் செயல்படுத்தும் பொருட்டு தமிழ்நாட்டுப் பாடநூல் கழகத்தின் பெயரினை "தமிழ்நாடு பாடநூல் மற்றும்



கல்வியியல் பணிகள் கழகம்" என மாற்றம் செய்து அறிவிப்பினை வெளியிட்டார்கள். அதற்கிணங்க அரசு ஆணை (நிலை) எண்.178, பள்ளிக்கல்வி (TRB)த்துறை, நாள் 06.09.2013 பிறப்பிக்கப்பட்டு தற்போது தமிழ்நாடு பாடநூல் கழகம் பெயர் மாற்றம் செய்யப்பட்டு தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம் என்ற பெயரில் இயங்கிவருகிறது.

### 10.2 கழகத்தின் பணிகள்

#### 10.2.1 பாடநூல்கள் அச்சிடல்

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பள்ளிக்கல்வி முறையை சீர்படுத்தும் பொருட்டு 2012–2013 கல்வியாண்டில் 1 ஆம் வகுப்பு முதல் 8 ஆம் வகுப்பு வரையில் முப்பருவக் கல்வி முறையினை அறிமுகப்படுத்தினார்கள். இம்முறைமை 2013–2014 ஆம் கல்வியாண்டில் 9 ஆம் வகுப்பிற்கும் விரிவுபடுத்தப்பட்டது. மாணவர்களின் புத்தகச் சுமையை வெகுவாகக் குறைக்கும் நோக்கில் இப்புதிய கல்வி முறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இப்புதிய முறையினால் மாணவர்களின் புத்தகச்சுமை வெகுவாக குறைந்துள்ளது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க

இந்த முறையில் புத்தகங்கள் மூன்று பகுதிகளாக, மூன்று பருவத்திற்கு பிரிக்கப்பட்டு வெளியிடப்பட்டுள்ளன.

2013–2014 ஆம் கல்வியாண்டில் 1 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு முடிய கல்வி பயிலும் மாணவ, மாணவியர்களுக்கு 6.90 கோடி பாடநூல்கள் இக்கழகத்தால் அச்சிடப்பட்டு விலையில்லாமல் வழங்கப்பட்டுள்ளன. மேலும், 3.24 கோடி பாடநூல்கள், இக்கழகத்தால் அச்சிடப்பட்டு தனியார் சுயநிதிப் பள்ளி மாணவர்களுக்கு நியாயமான விலையில் வழங்கப்படுகிறது.

2013–2014 ஆம் கல்வியாண்டில் மொத்தம் 10.14 கோடி பாடநூல்கள் அச்சிடப்பட்டன. இதில் சிறுபான்மை மொழிப் பாடநூல்களான தெலுங்கு, மலையாளம், கன்னடம், உருது, சமஸ்கிருதம் மற்றும் அராபிக் ஆகிய சிறுபான்மை மொழிப் பாடநூல்கள் இக்கழகத்தால் அச்சிடப்பட்டு வழங்கப்பட்டுள்ளது. இதன் மூலம் 1.35 இலட்சம் சிறுபான்மை மொழிகளில் கல்வி பயிலும் மாணவ, மாணவியர்கள் பயனடைந்துள்ளார்கள். அரசு மற்றும் அரசு நிதியுதவி பெறும் பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவியர்கள் பயன்பெறும் வகையில் தமிழக அரசால் ரூ.214.72 கோடி அளவில் செலவினம் மேற்கொள்ளப்பட்டது.



**10.2.2 பிறதுறைகளுக்கான நூல்கள் அச்சிடல்**

தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம் பிற துறைகளுக்காக வழிகாட்டி நூல்கள், வினா வங்கி, தீர்வுப்புத்தகங்கள், மாதிரி வினாத்தாள் நூல்கள், செயல்முறை கற்றலுக்கான அட்டைகள் அச்சிடும் பணியினை மேற்கொள்கிறது. 2013–2014 ஆம் கல்வியாண்டில் பிற துறைகளுக்காகக் கீழ்கண்ட நூல்களை அச்சிட்டுள்ளது.

- ஆதிதிராவிடர் மற்றும் பழுங்குடியினர் நலத்துறையின் கீழ் இயங்கும் பள்ளிகளில் 10 மற்றும் 12 ஆம் வகுப்புகளில் பயிலும் மாணவ, மாணவியர்களுக்காக 1.88 இலட்சம் கையேடுகள்.
- பிற்படுத்தப்பட்ட / மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினைச் சார்ந்த துறையின் கீழ் இயங்கும் பள்ளிகளில் 10 மற்றும் 12 ஆம் வகுப்பில் பயிலும் மாணவ, மாணவியர்க்காக 1.39 இலட்சம் கையேடுகள்.
- பெற்றோர் ஆசிரியர் கழகத்திற்காக 10, 12 ஆம் வகுப்புகளுக்குரிய 7.03 இலட்சம் வினா வங்கி நூல்கள்.
- 8, 9, 11, 12 ஆகிய வகுப்பு மாணவர்களுக்கு தேசிய பங்குச் சந்தை நிறுவனத்தின் 7.45 இலட்சம் நிதி சார்ந்த கல்வியறிவுப் புத்தகங்கள்.

- அனைவருக்கும் கல்வித்திட்டத்தின் கீழ் 1 முதல் 4 ஆம் வகுப்பு வரை பயில்வோருக்கு 84,900 எண்ணிக்கையிலான செயல்வழிக் கற்றல் அட்டைகள்.
- இடைநிலை ஆசிரியர் பயிற்சி பட்டயப்படிப்பு மாணவர்களுக்கான 93,000 கற்பித்தல்முறை வளநூல்கள்.
- அனைவருக்கும் கல்வி திட்டம் மூலமாக ஆசிரியர் பயிற்சி தனி மதிப்பு நூல்கள் 3,14,158 பிரதிகள் விநியோகம் செய்யப்பட்டுள்ளது.

### 10.2.3 மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ''விலையில்லா நிலவரைபடநூல்கள்'' வழங்கும் திட்டம்

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பின்படி நிலவரைப்பட நூல்கள் அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் 6 ஆம் வகுப்பு முதல் 10 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு வழங்கிட அறிவிக்கப்பட்டது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பின்படி 2013–2014 ஆம் கல்வியாண்டில் அரசு மற்றும் அரசு நிதி உதவி பெறும் பள்ளிகளில் 6 ஆம் வகுப்பு பயிலும் மாணவர்களுக்கு 11.85 இலட்சம் நிலவரைப்படநூல்கள் இக்கழகத்தால் கொள்முதல் செய்யப்பட்டு வழங்கப்படவுள்ளது. இதனால் அரசுக்கு ஏற்படும் செலவினம் ரூ.3.50 கோடி ஆகும்.



### 10.2.4 சுவர் வரைபடங்கள் கொள்முதல் மற்றும் விநியோகம்

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மாணவர்களின் அறிவாற்றலை மேம்படுத்துவதற்காக வகுப்பறைகளில் இந்தியா, தமிழ்நாடு மற்றும் சம்பந்தப்பட்ட மாவட்ட சுவர் வரைபடங்கள் மாட்டப்படவேண்டும் என அறிவுறுத்தியுள்ளார்கள். அதன்படி 4,47,500 எண்ணிக்கையிலான சுவரில் மாட்டுவதற்கேற்ப, இந்தியா, தமிழ்நாடு மற்றும் 32 மாவட்டங்களின் வரைபடங்கள் இக்கழகத்தால் கொள்முதல் செய்யப்பட்டு, அரசு மற்றும் அரசு உதவி பெறும் தொடக்க, உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளுக்கு இக்கல்வியாண்டில் வழங்கப்படவுள்ளது. மாணவர்கள் பயன்பெறும் பொருட்டு ரூ.11.56 கோடி தமிழக அரசால் செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

### 10.2.5 பிறமாநிலங்களில் தமிழ் வழியில் பயிலும் மாணவர்களுக்கு விலையில்லாப் பாடநூல்கள்

தமிழக அரசு ஆணையின்படி ஆண்டுதோறும் மகாராட்டிரம், புதுடெல்லி, குஜராத், கேரளா மற்றும் அந்தமான் நிக்கோபார் தீவுகளில் தமிழ் வழியில் கல்வி கற்கும் மாணவ, மாணவியர்களுக்கும் விலையில்லாப் பாடநூல்கள் அச்சிடப்பட்டு இக்கழகத்தால் வழங்கப்பட்டு வருகின்றது.

### 10.2.6 மத்திய இடைநிலைக் கல்வி வாரியப் (சி.பி.எஸ்.இ) பள்ளிகளுக்கான தமிழ்ப் பாடநூல்கள் (ஆண்டுப்பதிப்பு)

மத்திய இடைநிலைக் கல்வி வாரியப் (சி.பி.எஸ்.இ) பாடத்திட்டத்தைப் பின்பற்றும் சி.பி.எஸ்.இ. பள்ளிகள், தமிழ்நாடு மாநில வாரிய தமிழ் மொழிப் பாடப்புத்தங்களைப் பயன்படுத்தி வருகின்றன. அப்பள்ளிகளிடமிருந்து பெறப்படும் வேண்டுகோளுக்கும், தேவைக்கும் ஏற்றவாறு, மாநில ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தால் உருவாக்கப்பட்ட மூன்று பருவப் பாடநூல்களைச் சேர்த்து ஒரே தமிழ் மொழிப் பாடநூலாக அப்பள்ளிகளுக்காகவே தனிச்சிறப்புடையதாகத் தயாரித்து அச்சிட்டு இக்கழகம் நியாயமான விலைக்கு வழங்குகிறது. ஒவ்வொரு ஆண்டும் தொடர்ந்து சி.பி.எஸ்.இ. பள்ளிகளுக்கு 1 முதல் 10 ஆம் வகுப்புகளுக்கான தமிழ் மொழிப் பாடநூல்கள் பாடநூல் கழகத்தால் மறுபதிப்பில் அச்சிடப்பட்டு நியாயமான விலைக்கு வழங்கப்பட்டு வருகின்றன.

### 10.2.7 பாடநூல்களின் அட்டையில் விழிப்புணர்வுச் செய்திகள் அச்சிடல்

1 ஆம் வகுப்பு முதல் 9 ஆம் வகுப்பு பாடநூல்களில் மழைநீர் சேகரிப்பு, சுற்றுச்சூழல் பாதுகாப்பு, குழந்தைப்



பாதுகாப்பு, பல்லூடகப் பாதுகாப்பு மற்றும் தன் சுத்தம், சார்ந்த விழிப்புணர்வுச் செய்திகள் பின்பக்க அட்டையில் வண்ணப்படங்களாக அச்சிடப்படுகின்றன. இவை பள்ளி மாணவர்களிடையே விழப்புணர்வையும், இயற்கைளைப் பாதுகாத்தலும், குழந்தைகளின் உரிமைகளையும், தன் சுத்தத்தையும் அவர்கள் வாழ்க்கையில் கடைப்பிடித்திட வழி வகுக்கின்றன.

### 10.2.8 தரமான அச்சடிப்பு

பாடநூல்கள் அனைத்தும் நவீன அச்சுத் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி கணினி முறையில் அச்சு ஏற்றம் செய்யப்பட்டு “ஷீட் பெட் மற்றும் வெப் ஆப்செட்” மூலம் ஒன்று மற்றும் பல வண்ணங்களில் அச்சடிக்கப்படுகின்றன. பாடநூல்கள் அச்சிடுவதற்கான தாள்கள் தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனத்திலிருந்து கொள்முதல் செய்யப்படுகிறது. தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனம் வழங்கும் தாள்கள் உயர் தொழில்நுட்பம் சார்ந்த மேப்லித்தோ 80 ஜி.எஸ்.எம். காகிதமாகவும் வெண்மை மிக்கதாகவும் உறுதியானதாகவும் மற்றும் தரமானதாகவும் உள்ளன. பாடநூல்களுக்குத் தேவையான மேலட்டைகள் நல்ல தரமுள்ள 200 GSM அட்டைகளில் அச்சிடப்படுகின்றன.

தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனத்தினால் வழங்கப்பட்ட தாளில் இருந்து அச்சிடப்படும் பாடநூல்கள் இக்கழகத்தில் நன்கு அனுபவமுள்ள தொழில்நுட்ப அலுவலர்களால் தரப்பரிசோதனைக்கு உட்பட்டு அச்சிடப்படுவதால் நல்ல தரமுள்ள பாடநூல்கள் மாணவர்களுக்குக் கிடைக்கப்பெறுகிறது.

**10.2.9 குறித்த நேரத்தில் பாடநூல்கள் வழங்குதல்**

2013–2014 ஆம் கல்வியாண்டில் 5.34 கோடிப் பாடநூல்கள் அச்சிட்டு மே 2013ல் மாணவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. இதைப்போலவே 2.40 கோடி இரண்டாம் பருவப் பாடநூல்கள் மற்றும் 2.40 கோடி மூன்றாம் பருவப் பாடநூல்கள் குறித்த நேரத்தில் அச்சிடப்பட்டு மாநிலம் முழுவதுமுள்ள 66 மையங்களுக்கு அச்சகங்களில் இருந்து நேரடியாக வழங்கப்பட்டுள்ளது. தனியார் சுயநிதிப் பள்ளிகளுக்குத் தேவையான விற்பனை புத்தகங்கள் 22 வட்டார அலுவலங்கள் மூலமாக வழங்கப்படுகின்றன. மேலும் 1097 விற்பனை முகவர்கள் மூலம் வெளிச்சந்தையிலும் விற்பனை செய்யப்படுகிறது.



**10.3 வலைதளம் மூலம் பாடநூல்கள்**

தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத்தால் வெளியிடப்பட்ட பாடநூல்கள் *www.textbooksonline.tn.nic.in* என்னும் வலைதளத்தில் கிடைக்கப் பெறுகின்றன. மாணவர்கள் பாடநூல்களை அவர்களின் தேவைக்கேற்ப பதிவு இறக்கம் செய்து கொள்ள வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளதால் மாணவ சமுதாயத்திற்கு இவ்வலைதள வசதி மிகப்பெரிய வரமாகும்.

**10.4 2014–2015 கல்வியாண்டிற்கான பாடநூல்கள் அச்சிடல்**

தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத்தால் 2014–2015 ஆம் கல்வியாண்டில், 1 ஆம் வகுப்பு முதல் 9 ஆம் வகுப்பு வரையிலான முப்பருவப் பாடநூல்கள் 7.40 கோடியும், 10 ஆம் வகுப்பிற்குரிய பாடநூல்கள் 67.76 இலட்சமும் அச்சிட திட்டம் வகுக்கப்பட்டு, அவற்றில் 1 முதல் 9 ஆம் வகுப்பு வரையிலுள்ள முதல் பருவத்திற்குரிய பாடநூல்கள் அச்சிடப்பட்டு விநியோகிக்கப்பட்டுள்ளது.

அவ்வாறே 10 ஆம் வகுப்பிற்குரிய பாடநூல்கள் 67.76 இலட்சம் பாடநூல்களும், 11 மற்றும் 12 ஆம் வகுப்பிற்கு 2.06 கோடி பாடநூல்களும் அச்சிட்டு விநியோகம் செய்யப்பட்டுள்ளது.

தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம் மிகச்சிறந்த அச்சகத்தார்களுடன் தொடர்பு மற்றும் மேம்படுத்தப்பட்ட போக்குவரத்து வசதிகள் கொண்டுள்ளதால் பாடநூல்கள் மாணவ மாணவியர் அனைவருக்கும் குறித்த நேரத்தில் வழங்கி மாணவர்களின் தேவைகளை முழுமையாக நிறைவு செய்கிறது.

## 10.5 2014–2015 ஆம் ஆண்டிற்கான கல்வி உபகரணங்கள் வாங்குதல் குறித்த திட்டங்கள்

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் அறிவித்துள்ளவாறு மாணவ மாணவியர்களுக்கு வழங்கப்படும் விலையில்லா கல்வி உபகரணங்கள் தரமானதாகவும், குறித்த காலத்திலும் வழங்கப்பட வேண்டும் என்பதைக் கருத்தில் கொண்டு பள்ளிக் கல்வித்துறையின் கீழ் செயல்படும் வெவ்வேறு இயக்ககங்கள் கல்வி சார்ந்த பணிகளில் தனிக் கவனம் செலுத்தி சிறப்பாகச் செயல்பட வேண்டும் என்ற அடிப்படையிலும், மாணவ, மாணவியர்களுக்கு வழங்கப்படும் அனைத்துப் பொருட்களையும் கொள்முதல் செய்து விநியோகிக்கும் பணி இனி வருங்காலங்களில் தமிழ்நாட்டுப் பாடநூல் கழகம் கொள்முதல், ஒருங்கிணைப்பு மையமாக செயல்பட ஏதுவாக



தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம் எனப் பெயர் மாற்றம் செய்திட அரசால் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

- புத்தகப்பைகள்
- வண்ணம் தீட்டும் குச்சிகள்
- வண்ணப் பென்சில்கள்
- கணித உபகரணப் பெட்டிகள்
- காலணிகள்
- கம்பளி ஆடைகள் (ஸ்வெட்டர்கள்)
- கணித பெட்டிகள்
- நில வரைபட நூல்கள்
- சுவர் வரை படங்கள்

தொழில்நுட்ப மற்றும் மதிப்பீட்டுக் குழுக்கள் ஏற்படுத்தி, மாணவர்களுக்கு மேற்குறிப்பிட்ட கல்வி உபகரணங்களை நல்ல முறையிலும் குறித்த நேரத்தில் தரமாகவும் வழங்கும் வகையில் ஒப்பந்தப்புள்ளி தயாரித்தல், பரிசீலித்தல், ஒப்புநோக்கிப் பார்த்தல், தகுந்த ஒப்பந்ததாரரை தெரிவு செய்தல் போன்ற நடவடிக்கைகள் மூலம் தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம் நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது. போதிய ஆய்வுகள்

மேற்கொள்ளப்பட்டு தரமான விலையில்லா பொருட்களை வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் விருப்பப்படி அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் பயிலும் மாணவ மாணவியர்களுக்கு தகுந்த நேரத்தில் தரமான பாடபுத்தகங்கள் மற்றும் அரசால் வழங்கப்படும் அனைத்து விலையில்லா பொருட்களையும் வழங்குவதே தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத்தின் உயரிய நோக்கமாகும்.

**கே. சி. வீரமணி**
**பள்ளிக் கல்வித்துறை அமைச்சர்**